## ஜுலை மாத வேத வினா போட்டி விடைகள்

1. ஒரு கூடையில் வைத்து, ஆற்றில் விட்டாள்
2. எரியும் புதர்
3. பொன் கன்று
4. சவுல்
5. நாசரேத்து
6. கலிலேயா கடல்
7. யோவான் 11:35
8. சீடரின் கால்களை கழுவினார்
9. கொப்பேர் (ஆதி.6:14)
10. 150 (ஆதி.7:24)
11. எப்ராயீம், மனாசே (ஆதி.41:51-52)
12. எத்திரோ (யாத்.3:1)
13. ஏசையா (யாத்.6:23)
14. தண்ணீர் ரத்தமாக மாறியது (யாத்.7:20)
15. அனனியா (அப்.9:17-18)
16. லிஸ்திரா (அப்.14:19)
17. ஏதென்ஸ் (அப்.17:22-23)
18. கூடாரம் செய்தல் (அப்.17:18:3)
19. 3 நாட்கள் (யாத்.15:22)
20. திகிலாத் பிலேசர் (2இராஜா.15:29)
21. ஆகாப் (1இராஜா.21:25)
22. சனகெரிப் (2இராஜா.19:36,37)
23. ஆகாஸ் (2கொரி.28:3)
24. சிதேக்கியா (எரே.52:11)
25. யோனா 1:1-2

---

**ஜெபியுங்கள்...**

- ❖ பைபிள் உலகம் குடும்பத்திற்காக...
- ❖ இந்த கடிதம் உங்களிடம் கிடைக்க உதவிய உள்ளங்களுக்காக...
- ❖ வியாழக்கிழமை மாலை Google Meet Online ஜெபம் தொடர்ந்து நடைபெற...
- ❖ வேதவினா போட்டியில் அநேக மாணவர்கள் கலந்துகொள்ள...
- ❖ ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்பட...
- ❖ இந்த மாதம் நாம் உணவளிக்க போகும் கிராம சபைக்காக, இரட்சிப்பிற்காக, தேவைகள் சந்திக்கப்பட...



---


தொகுப்பாசிரியர்கள்

திரு. P. **இம்மானுவேல்,** திரு. J. **பெஞ்சமின்**

திரு. R. **சுதர்சன்,** செயலர், திரு. T. **சுதாகர்,** பொருளர்



# பைபிள் உலகம்

மாதாந்திர செய்தி கடிதம்

**ஜுலை 2024**


என் சத்தத்தைக் கேட்டு,

**நான் உங்களுக்குக் கற்பிக்கிறபடியே**

**எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள்,**

அப்பொழுது

**நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்,**

**நான் உங்கள் தேவனாயிருப்பேன்,**

*எரேமியா 11:3*




Post Box No.902, Sathuvachari, Vellore - 632009

9894417502

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிக்கு,

அன்பின் வாழ்த்துகள்!

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் அளவற்ற கிருபையால் நாங்கள் நலம், நீங்கள் நலமாயிருக்கிறீர்கள் என்று விசுவாசிக்கிறேன். புதிய மாதத்தின் வாழ்த்துகளை தெரிவிக்கிறேன். உங்கள் தேவைகளை தேவன் சந்திப்பாராக!




***நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்*** (கலா.1:15)

இம்மட்டும் நமது பைபிள் உலகம் குடும்பத்தை நடத்தி வருகிறார். தேவைகளை சந்திக்க வல்லவராயிருக்கிறார். தொடர்ந்து ஜெபியுங்கள், தாங்குங்கள்.

நமது தேசத்தின் விடுதலை நாள் (ஆகஸ்ட் 15) வாழ்த்துகளை தெரிவிக்கிறேன். சுதந்திரமான தேசத்தில் வாழ நம்மை தேவன் ஆசிர்வதித்துள்ளார். தேச தலைவர்களுக்காக ஆண்டவரிடம் வேண்டுதல் செய்கிறேன். ஆசிர்வதிப்பாராக!

உங்கள் வேத வினா விடைகளுக்காக காத்திருக்கிறேன் சகோதரி.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக!

தங்கள் அன்புடன்



---

**இந்த மாதத்தில் பிறந்தநாள் மற்றும் திருமண ஆண்டு விழாவைக் கொண்டாடுபவர்களை**
**பைபிள் உலகம் வாழ்த்துகிறது மற்றும் ஆசீர்வதிக்கிறது.**

---



## ஒரு தாயின் அன்பு

ஒரு தாய் தனது ஒரே மகனுடன் ஒரு சிறிய கிராமத்தில் வசித்து வந்தார். உலகில் உள்ள அனைத்தையும்விட அவள் அவனை நேசித்தாள். ஒரு நாள், மகன் ஒரு பயங்கரமான குற்றம் செய்து, மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

தாய் மிகவும் சோகமடைந்தாள், ஆனால் அவள் தன் மகனை நேசிப்பதை நிறுத்தவில்லை. அவள் மன்னனிடம் சென்று, தன் மகனின் இடத்தைப் பெற முன்வந்தாள், கருணை கோரினாள். அவளது அன்பால் மனம் நெகிழ்ந்த அரசன், அதை நிரூபிக்கும்படி கேட்டான்.

அரசன், ‘உன் கண்ணீரை ஒரு வாளியில் நிரப்ப முடிந்தால், உன் மகனின் உயிரைக் காப்பாற்றுவேன்‘ என்றார். அம்மாவும் சம்மதித்து இரவும் பகலும் அழுது, வாளியில் கண்ணீரை நிரப்பினாள்.

அவள் முடித்தவுடன், ராஜா அவளிடம் வாளியைக் காலி செய்து மீண்டும் அவளது கண்ணீரை நிரப்பச் சொன்னார். தாய் மனம் உடைந்து அழுது கொண்டே இருந்தாள், மீண்டும் வாளியை நிரப்பினாள்.

அவளுடைய அசைக்க முடியாத அன்பைக் கண்டு இரக்கம் கொண்ட அரசன், மகனின் உயிரைக் காப்பாற்றினான்.

ஒரு தாயின் அன்பு நிபந்தனையற்றது, தன்னலமற்றது மற்றும் அசைக்க முடியாதது. தன் சொந்த மகிழ்ச்சியை தியாகம் செய்து, தன் குழந்தையைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் அவள் எந்த எல்லைக்கும் செல்வாள்.

***ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.*** - ஏசாயா 49:15